# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 197/2024**

**Deposition of LW2 examined as PW2** Dt. 17.03.2025

| | |
|---|---|
| Name | ராஜதுரை |
| Father's/Husband's Name | சேது |
| Village | காரைமேடு |
| Taluk | சீர்காழி |
| Age | 40/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 17.03.2025

(Accused Present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வாரசந்தையில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி லோன் வாங்கி தருவதாக கூறி என்னிடம் ரூ. 65000/- பணத்தை பெற்றுள்ளார். சொன்ன படி லோன் வாங்கி தரவில்லை என்பதால் எதிரியிடம் பல முறை பணத்தை திரும்ப கேட்டேன். மேலும் ரூ. 35000/- கொடுத்தால் லோன் வாங்கி தருவதாக கூறினார் அப்போது மழைக்காலம் என்பதால் வியாபாரம் சரியாக நடக்கவில்லை என்பதாலும் பாதி பணமாவது கொடுத்தால்போதும் என்ற நிலையில் 16.05.2024 ம் தேதி எனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் இருசக்கர வாகனத்தில் கண்டமங்கலத்தில் உள்ள எதிரி வீட்டிற்கு பணத்தை கேட்பதற்காக சென்றிருந்தோம். அப்போது வீட்டில் எதிரியின் அம்மா மட்டும் இருந்தார். அவர் உங்களிடமிருந்து பெற்ற பணத்தை கூறியதன் பேரில் இருசக்கரவாகனத்தில் காலை 9.45 முதல் 10.00 மணியளவில் தேத்தாகுடி நண்டு வடை பாளம் அருகே வந்து கொண்டிருந்த போது எதிரி எந்த திசையில் இருந்து வந்தார் என்று தெரியவில்லை. திடீரென்று எனது இருசக்கர வாகனத்தின் முன்பு வழி மறித்து அவரது இருசக்கர வாகனத்தை நிறுத்தினார். நான் வீட்டிற்கு சென்று பணம் கேட்டதால் எதிரி என் மீது இருந்த கோபத்தில் கையால் அடித்து கீழே தள்ளிவிட்டார். எனது மனைவியின் புடவையை பிடித்து இழுத்து அடித்து காலால் மிதித்தார். அருகில் கிடந்த கட்டையை காட்டி மிரட்டினார். பின்னர் எதிரியிடம் இனிமே பணம் வேண்டாம் என்று கெஞ்சிவிட்டு மனைவி குழந்தைகளை வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டேன். எதிரி தாக்கியதில் எனது மனைவிக்கு உடல் நிலை சரியில்லாததால் மாலை 5.00 சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றேன். மருத்துவமனையில் 5 நாட்கள் சிகிச்சை எடுத்து கொண்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்பதால் குறுக்கு விசாரணை தற்சமயம் முடிக்கப்பட்டது.

S.ராஜதுரை

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

17/03/25

நீதித்துறை நடுவர் எண் II

மயிலாடுதுறை